Theft of electric motors

* 115 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that a number of persons responsible for the theft of electric motors at various places have been apprehended in Madras City on or about the 10th June 1971; and

(b) if so, whether the motors were recovered?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ) ஆம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்போது சிலைகள் திருடுவது, மின்சாரச் சாதனங்களைத் திருடுவது போன்ற குற்றங்கள் அதிக மாக நடைபெறுகின்றன. ஒயர்களும், மின் கருவிகளும் திருடப் படுவதால், விவசாயிகளும், பொதுமக்களும் பாதிக்கப்படுகிறார்கள். இம்மாதிரியான திருட்டுகள் நடைபெறாமலிருக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துவருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இத்தகைய திருட்டு கள் நடைபெறுவதைத் தடுப்பதற்காகச் சிறப்பு சுற்று காவல் துறை யினர் பிரிவு நிறுவப்பட்டு இருக்கிறது. அது சென்னை நகரில் செயல்பட்டு வருகிறது. குற்றம் சாட்டப்படுபவர்கள்மீது கடுமை யான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மேலும் குற்றங்கள் நடைபெறாமல் இருக்க, சிறந்த கண்காணிப்புடன் காவல் துறையினர் கடும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, தமிழ்நாடு முழுவதும் இப்போது ஒயர்கள், மின்சார மோட்டார்கள், இதர மின்சாரப் பொருட்கள் திருடப்பட்டது சம்பந்தமாகப் பல வழக்கு கள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. ஒயர்கள் திருடுவதை உடனடியாகக் கண்டுபிடிப்பதற்கு மெயின் லைன்களில் 'சிக்னல்' கம்பிகள் பொருத்தப்பட்டிருப்பது போல் கிளை லைன்களிலும் 'சிக்னல்' கம்பிகள் பொருத்தப்பட்டால் இந்தத் திருட்டுகளைத் தடுக்கலாம். அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இருக்கின்ற நிதி நிலையைப் பொறுத்துத்தான் அத்தகைய ஏற்பாட்டினை எல்லா இடங்களிலும் கொண்டுவர முடியும். அதற்கு அதிகச் செலவு ஆகும். அதனால் நிதி வசதிக்கேற்பப் பின்னால் இதுபற்றி யோசிக்கப் படும். இருப்பினும் நான் ஏற்கெனவே கூறியமாதிரி, திருட்டு களைத் தடுப்பதற்குத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

வாலாஜா நகராட்சி பள்ளிகள்

* 116 வினு.—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :